# 16 செப்டம்பர் 2023 நடப்பு நிகழ்வுகள்

<table>
<tr>
<td>தமிழகம் பசுமை ஹைட்ரஜன் ஆராய்ச்சி மையமாக  மாற உள்ளது<br><br></td>
<td>செய்தி:<br>தமிழ்நாடு பசுமை ஹைட்ரஜன் ஆராய்ச்சி மையமாக மாற உள்ளது<br><br>• தமிழ்நாட்டில் ஹைட்ரஜன் கணவாய்  புத்தாக்க திரள் (HVIC-TN) திட்டத்தின் கீழ் பல்வேறு நிறுவனங்களுடன் ஐஐடி மெட்ராஸ்  கைகோர்த்து பொருளாதார விகிதத்திலும் அளவிலும் எதிர்கால எரிபொருளை உற்பத்தி செய்வதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளது<br><br>• இந்த முன் முயற்சியின் ஒரு பகுதியாக, ஐஐடி-மெட்ராஸ் பசுமை ஹைட்ரஜன் மேலும் மேம்பட செய்ய பல தொழிலகங்கள்  கூட இணைந்து செயல்பட உள்ளன<br><br>• இந்த முயற்சி தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கத்திற்கு கணிசமான பங்களிப்பை வழங்கும் என்றும் தமிழகத்தை  ஒரு ஆராய்ச்சி மையமாக மாற்ற உதவும்  என எதிர்பார்க்கப்படுகிறது.<br>.<br><br>முக்கிய குறிப்புகள்:<br><br>•பசுமை ஹைட்ரஜன் ஆராய்ச்சி மையத்தின் முதன்மை நோக்கம் பசுமை ஹைட்ரஜன் தொழில்நுட்பம் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும்.<br><br>• மின்னாற்பகுப்பின் செயல்திறன் மற்றும் செலவு-செயல்திறனை மேம்படுத்துதல் மற்றும் மேம்பட்ட சேமிப்பக தீர்வுகளை உருவாக்குதல் ஆகியவை இதில் அடங்கும்.<br><br>• தண்ணீரிலிருந்து  ($H_2O$) ஹைட்ரஜன் ($H_2$) மற்றும் ஆக்ஸிஜனை ($O_2$) பிரிக்கும் முறையை கொண்ட மின்னாற்பகுப்பு மூலம்  காற்று அல்லது சூரிய சக்தி போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களைப் பயன்படுத்தி பசுமை ஹைட்ரஜன் தயாரிக்கப்படுகிறது.<br><br>• ஹைட்ரஜனின் பசுமை ஹைட்ரஜன் வடிவம் சுற்றுச்</td>
</tr>
</table>

| | |
|---|---|
| | சூழலுக்கு உகந்ததாகக் கருதப்படுகிறது, ஏனெனில் அதன் உற்பத்தியின் போது அது பசுமை குடில் வாயு வெளியேற்றத்தை உருவாக்காது. |
| தேசிய பசுமை ஹைட்ரஜன் திட்டம் | முக்கிய குறிப்புகள்:<br><br>●2023 ஆம் ஆண்டு ஜனவரி 4ம் நாள் மத்திய அமைச்சரவை 2023-24 நிதியாண்டு முதல் 2029-30 நிதியாண்டு வரை ரூபாய் 19,744 கோடி செலவில் தேசிய பசுமை ஹைட்ரஜன் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.<br><br>●.பசுமை ஹைட்ரஜனைப் பயன்படுத்துவதற்கும், உற்பத்தி செய்வதற்கும் மற்றும் ஏற்றுமதி செய்வதற்கும் இந்தியாவை உலகளாவிய மையமாக மாற்ற வேண்டும்என்பதே இத் திட்டத்தின் நோக்கம் ஆகும்<br><br>2030 ஆம் ஆண்டிற்குள் இந்த திட்டத்தின் எதிர்பார்க்கப்படும் முடிவுகள் பின்வருமாறு:<br><br>• இந்தியாவின் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி திறன் ஆண்டுக்கு 5 மில்லியன் மெட்ரிக் டன் எட்டும் என்றும் இதன் பங்களிப்பால் புதைபடிவ எரிபொருட்களின் இறக்குமதியை சார்ந்திருப்பதைக் குறைக்கும்.<br><br>• இந்த திட்டம் மூலம் இலக்குகளை அடைவதன் காரணமாக 2030 ஆம் ஆண்டுக்குள் ரூ.1 லட்சம் கோடி மதிப்பிலான புதைபடிவ எரிபொருள் இறக்குமதி செய்வதை குறைக்க இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது.<br><br>• பசுமை ஹைட்ரஜனின் மொத்த உற்பத்தி மற்றும் அதனை அடிக்கடி பயன்படுத்துவதன் மூலம் ஆண்டுக்கு 50 மில்லியன் மெட்ரிக் டன் கார்பன் டை ஆக்சைடு(Co2) வெளியேற்றம் தவிர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. . |
| பொது நூலகங்களை புதுப்பித்தல் | செய்தி:<br>பொது நூலகங்களை புதுப்பிப்பது கல்வியை வலுப்படுத்தும்<br>.<br>● "குடிமை சமுதாயத்தை மீட்டெடுக்க நூலகங்களை தொடங்குங்கள்" என்ற தலைப்பில் சிந்தனையைத் தூண்டும் கட்டுரையை புகழ்பெற்ற அமெரிக்க சமூகவியலாளர் எரிக் கிளினென்பெர்க், சிறப்பான ஜனநாயக கலாச்சாரங்களை வளர்ப்பதில் |

| | |
|---|---|
|  | நூலகங்களுக்கு முக்கிய பங்கு உள்ளது என எடுத்துக்காட்டினார்.<br><br>முக்கிய குறிப்புகள்:<br>• செழுமையான பாரம்பரியத்துடன் உள்ள தமிழ்நாடு மாநிலம் பொது நூலகச் சட்டத்தை அறிமுகப்படுத்திய முதல் இந்திய மாநிலம் என பெயர்பெற்றது .<br>• பொது நூலகங்களுக்கான பிரத்யேக இயக்குநரகம் 1972 ஆம் ஆண்டு இங்கு அமைக்கப்பட்டது .<br>• ஆனால் தமிழகத்தில் உள்ள பொது நூலகங்களின் தற்போதைய நிலை கவலையளிக்கிறது.<br>• தமிழக அரசு மதுரையில் 'கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை' அமைத்தது .<br>• மாநில அரசின் முயற்சியால் எழுத்தறிவு விகிதங்களும் தமிழகம் முழுவதும் உள்ள நூலகங்களின் எண்ணிக்கையையும் கணிசமாக அதிகரித்துள்ளது. |
| எலும்புக்கூடுகளைக் கொண்ட பண்டைய முதுமக்கள் தாழி தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது | செய்தி:<br>தமிழகத்தின் திருப்பூர் நகரில் சாலையை தோண்டியபோது எலும்புக்கூடுகள் அடங்கிய முதுமக்கள் தாழி கண்டெடுக்கப்பட்டது.<br><br>• எலும்புக்கூடுகள் அடங்கிய முதுமக்கள் தாழி தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்டது<br><br>முக்கிய குறிப்புகள்:<br>• தாழியின் அளவு மிகப் பெரியதாகவும் மற்றும் அதில் மண்டை ஓடுகள் மற்றும் எலும்புகள் இருந்தன.<br>• தாழியை சுற்றிலும் உடைந்த சிறிய மட்பாண்டத் துண்டுகள் காணப்பட்டன.<br>• இந்த தாழி 2,000 ஆண்டுகளுக்கு மேல் பழமையானது என்று நம்பப்படுகிறது. |
| இரும்பு பெண்மணி திட்டம் | செய்தி: இரும்பு பெண்மணி திட்டம்: விருதுநகரில் 2ம் கட்டம் தொடங்கப்பட்டது. |

To get free Live Classes, Materials Scan this QR Code & Download our Adda247 App




- மாவட்ட ஆட்சியர் வி.பி.ஜெயசீலன் இரண்டாம் கட்டத்தை தொடங்கி வைத்தார்
- இதன் நோக்கம் மூலம் பருவப் பெண்களின் இரத்த சோகையை எதிர்த்து நிற்க ஊட்டச்சத்து கருவிகளை வழங்குவது ஆகும் .

முக்கிய குறிப்புகள்:

- இரும்பு பெண்மணி திட்டம் இந்தியாவில் உள்ள தமிழகத்தில் 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் விருதுநகர் மாவட்ட நிர்வாகத்தால் தொடங்கப்பட்ட ஒரு சுகாதார முன்னெடுப்பு ஆகும் .

- மாவட்டத்தில் உள்ள பெண்களின் ரத்த சோகை பிரச்னைக்கு தீர்வு காண்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

- மிதமான அல்லது கடுமையான இரத்த சோகை உள்ளவர்களுக்கு மூன்று மாதங்களுக்கு ஊட்டச்சத்து கருவிப்பெட்டி வழங்கப்படுகிறது.

- இந்த கருவிப்பெட்டியில் திராட்சை, உலர் அத்திப்பழம், சிவப்பு போஹா, இரும்பு சிரப் மற்றும் புரத கலவை ஆகியவற்றைக் கொண்டுள்ளது

- தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு 2021 இன் படி 12 முதல் 45 வயதுக்குட்பட்ட பெண்களிடையே இரத்த சோகை பாதிப்பு அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது.

பதிப்புரிமை © ***Adda247***
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த ஆவணத்தின் எந்தப் பகுதியையும் *Adda247* இன் முன் அனுமதியின்றி மீண்டும் உருவாக்கவோ, மீட்டெடுக்கும் அமைப்பில் சேமிக்கவோ அல்லது எந்த வடிவத்திலும் அல்லது எந்த வகையிலும் மின்னணு, இயந்திர, புகைப்பட நகல், பதிவு செய்தல் அல்லது வேறுவிதமாக அனுப்பக்கூடாது.